தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமைக்கு ரூ.50 கோடி சுழற்சி நிதி

அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்

சென்னை கிண்டியில் வெப்ப அபாய மேலாண்மை பயிலரங்கை செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்த வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் வருவாய் நிர்வாக ஆணையர் நா.முருகானந்தம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன், பேரிடர் மேலாண்மை ஆணையர் (பொறுப்பு) ப.காயத்ரி கிருஷ்ணன் உள்ளிட்டோர்.

சென்னை, ஜூலை 28: தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமைக்கு ரூ. 50 கோடி சுழற்சி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

சென்னை கிண்டியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 'வெப்பத் தாங்கு திறன் கொண்ட தமிழ்நாட்டை நோக்கி' - வெப்ப அபாய மேலாண்மை குறித்த பயிலரங்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வுக்கு, அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் தலைமை வகித்து பேசியதாவது:

தவெக அரசு பொறுப்பேற்ற பின், பேரிடர் மேலாண்மையில் முன்னெச்சரிக்கை, ஆயத்த நிலை, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சியர்கள் வசம் முன்கூட்டியே நிதி இருப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, ரூ.50 கோடி சுழற்சி நிதியை தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப ஆட்சியர்களுக்கு இந்த நிதி வழங்கப்படும். மேலும், மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான முன்களப் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 550 ஆப்தா மித்ரா தன்னார்வலர்களும், 6,034 யுவா ஆப்தா மித்ரா தன்னார்வலர்களும் பேரிடர் மேலாண்மையில் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

ரூ.55 கோடியில் பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சி, ஆராய்ச்சி, திறன் மேம்பாடு, கொள்கை ஆதரவு மற்றும் அறிவியல் புதுமைகளுக்கான மாநில தலைமை நிறுவனமாக தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை நிறுவனம் விளங்கும். கடந்த ஜூன் மாதம் வெளியிட்ட தமிழ்நாடு மாநில வெப்ப செயல் திட்டம் 2026, நாட்டிலேயே விரிவான திட்டங்களில் ஒன்றாகும் என்றார்.

இதில், கூடுதல் தலைமைச் செயலர் ந.முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலர் கே.எஸ்.பழனிசாமி, பொதுப்பணித் துறை செயலர் ஆர்.செல்வராஜ், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ். சமீரன், சமூக பாதுகாப்புத் திட்ட இயக்குநர் ப.காயத்ரி கிருஷ்ணன், தேசிய சுகாதார இயக்க இயக்குநர் எஸ்.அனீஷ் சேகர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆஷா அஜித் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வெப்ப தாக்கம் குறைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்தப் பயிலரங்கில் சென்னை மாநகராட்சியில் வெப்பப் பாதிப்புக்கு உள்ளாகும் வார்டுகளில் அதைச் சமாளிப்பதற்கான ஆயத்த நிலையை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. அத்துடன், வெப்பத் தாக்கத்தைக் குறைக்கும் வகையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும், அதற்கான திட்ட மேலாண்மைப் பிரிவை அமைப்பதற்கும் சென்னை மாநகராட்சி மற்றும் ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் கவுன்சில் குழு ஆகியவை சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், கூடுதல் தலைமைச் செயலரும், வருவாய் நிர்வாக ஆணையருமான நா.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில், மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ். சமீரன் புரிந்துணர்வு ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டார்.

டி.ஜி.வைணவக் கல்லூரியில் பாராட்டு விழா

ஆர். பிரக்ஞானந்தாவுக்கு சதுரங்க சாதனைகளுக்காக ரூ.1லட்சம் ரொக்கப் பரிசு வழங்கி கௌரவித்த டி.ஜி.வைணவ கல்லூரிச் செயலர் அசோக் குமார், அண்ணா நகர் எம்.எல்.ஏ. வி. கே. ராம்குமார், கல்லூரி முதல்வர் கேப்டன் சேது. சந்தோஷ்பாபு, பொருளாளர் அசோக் கெடியா, விளையாட்டுச் செயலாளர் ஹிதேஷ் கன்னோடியா.

சென்னை, ஜூலை 28: சென்னை பல்கலைக்கழக டாக்டர் சிவந்தி ஆதித்தன் சுழற்கோப்பையைத் தொடர்ந்து 3-ஆவது ஆண்டாக வென்று சாதனை படைத்தவர்களுக்கும், சதுரங்க வீரர் ஆர்.பிரக்ஞானந்தாவுக்கும் டி.ஜி.வைணவக் கல்லூரி சார்பில் திங்கள்கிழமை பரிசு வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இந்த விழாவில் அண்ணா நகர் எம்எல்ஏ வி.கே.ராம்குமார், கல்லூரிச் செயலாளர் அசோக் குமார் முந்த்ரா, கல்லூரி முதல்வர் கேப்டன் சேது, சந்தோஷ்பாபு, கல்லூரியின் பொருளாளர் அசோக் கெடியா, விளையாட்டுச் செயலாளர் ஹிதேஷ் கன்னோடியா உள்ளிட்டோர் பேசினர்.

கிராண்ட்மாஸ்டர் ஆர். பிரக்ஞானந்தாவின் சதுரங்க சாதனைகளுக்காக ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார். மேலும், சாம்பியன் அணிகள் மற்றும் டாக்டர் சிவந்தி ஆதித்தன் சுழற்கோப்பையைத் தொடர்ந்து 3-ஆவது ஆண்டாக வென்ற 138 மாணவர்களுக்கும் 10 பயிற்சியாளர்களுக்கும் ரூ. 4, லட்சம் ரொக்கப் பரிசும் என மொத்தம் ரூ. 5 லட்சம் வழங்கப்பட்டது. நிகழ்வின் இறுதியில் ஆர்.பிரக்ஞானந்தா ஏற்புரை ஆற்றினார்.

தடகளப் போட்டிகளில் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள டி.ஜி.வைணவக் கல்லூரி சென்னை பல்கலைக்கழகத்தின் டாக்டர் சிவந்தி ஆதித்தன் சுழற்கோப்பையை கடந்த தொடர்ந்து 3 ஆண்டுகளாக வென்று வருகிறது. மேலும், சர்வதேச சதுரங்கப் போட்டிகளில் சாதனை படைத்த கிராண்ட்மாஸ்டர் ஆர்.பிரக்ஞானந்தா, இதே கல்லூரியில் பி.பி.ஏ. 2-ஆம் ஆண்டு பயின்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தப் பணிகள்: மாநகராட்சி அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி

சென்னை, ஜூலை 28: சென்னை மாநகராட்சியில்பொறியாளர்கள், அலுவலர்கள் உள்ளிட்டோருக்கு ஒப்பந்த பணிகளுக்கான கோப்புகளைக் கையாள்வது குறித்த சிறப்பு பணித் திறன் பயிற்சி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

சென்னை மாநகராட்சியில் கடந்த திமுக ஆட்சியில் பல திட்டப்பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டிருந்தது. அவற்றில் சாலை நடைமேடை பணி உள்ளிட்ட சுமார் ரூ.700 கோடிக்கான பணிகள் தவெக ஆட்சிக்கு வந்த பின் மாநகராட்சி ஆணையரால் ரத்து செய்யப்பட்டது.

ஒப்பந்த விதிகளை கடைப்பிடிக்காமல் பணிகளுக்கான ஒப்பந்தம் கோரப்பட்டதால் ரத்து செய்யப்பட்டதாகவும், முறைப்படி அவற்றை சீராக்கி மீண்டும் பணிகள் தொடங்கப்படும் என்றும் மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஒப்பந்தம் தொடர்பான பணிகளை மேற்கொள்வது குறித்து பொறியாளர்கள், அலுவலர்கள் உள்ளிட்டோருக்கான சிறப்புப் பணித் திறன் பயிற்சி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

ரிப்பன் கட்டட வளாகம் அம்மா மாளிகை கூட்டரங்கில் நடைபெற்ற பயிற்சியை ஆணையர் ஜி.எஸ்.சமீரன் தொடங்கி வைத்தார்.

ஒப்பந்தவெளிப்படைத்தன்மை சட்டம் மற்றும் விதிகள், மின்னணு ஒப்பந்தம் மற்றும் தேசிய தகவல் மைய மின்னணு கொள்முதல் அமைப்பு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஒப்பந்தப் பணிகள், சட்ட நடைமுறைகள், பதிவேடுகள், செயலிகள், மின்னணு ஆளுமை மற்றும் அலுவலகம் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

வரும் ஆக.1 வரை (சனிக்கிழமை) நடைபெறும் பயிற்சி காலை 9.30 மணிக்குத் தொடங்கி மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளது. 1,250 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

'காவலன்' செயலி குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்

அமைச்சர் பெ.விஸ்வநாதன்

சென்னை, ஜூலை 28: உயர்கல்வி நிறுவனங்களில் 'காவலன் எஸ் ஓஎஸ்' செயலி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, மாணவிகளுக்கான பாதுகாப்பு, போதைப் பொருள் தடுப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு காவல் துறையுடன் பல்கலைக்கழகங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று உயர் கல்வித் துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் தெரிவித்தார்.

கல்வி வளாகங்களில் போதைப் பொருள்கள் நடமாட்டம் மற்றும் மாணவர்கள் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து உயர் கல்வித் துறை அதிகாரிகள், அரசுப் பல்கலை. பதிவாளர்கள் அடங்கிய கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், அமைச்சர் பெ.விஸ்வநாதன் பங்கேற்று ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசியதாவது:

தமிழக காவல் துறையின் 'காவலன்' செயலி குறித்த விழிப்புணர்வை கல்வி நிறுவனங்களில் மாணவ, மாணவிகளிடையே ஏற்படுத்தி, அதன் பயன்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும். மாணவிகளுக்கான பாதுகாப்பு, போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாககாவல் துறையுடன் உயர் கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.

தொடர்ந்து, சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படையின் தலைவரும் ஐ.ஜி.யுமான, கே.பவானீஸ்வரி பேசியதாவது:

சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படை மூலம் கல்வி நிறுவனங்களில் மாணவிகளுக்குபாதுகாப்பானமற்றும் அச்சமற்ற சூழலை உருவாக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தடுப்பு நடவடிக்கைகள், நிறுவன அளவிலான முன்னெடுப்புகள் செயல்படுத்தப்படுகின்றன. 'காவலன்' செயலியின் பயன்கள் குறித்து மாணவ, மாணவிகளிடையே எடுத்துரைக்க வேண்டும் என்றார்.

இதைத் தொடர்ந்து, தமிழக உள்துறை இணைச் செயலரும், போதைப் பொருள் தடுப்பு மன்ற திட்ட மேலாண்மை பொறுப்பு அதிகாரியுமான ஆனி மேரி ஸ்வர்ணா பேசினார்.

இந்தக் கூட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு, தடுப்பு நடவடிக்கைகள், தகவல் பரப்புதல், புகார் தெரிவிக்கும் நடைமுறைகள் போன்றவை மூலம் போதைப் பொருள் இல்லா வளாகங்களை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

எம்சிசிஐ புதிய தலைவராக ஏ.விஸ்வநாதன் தேர்வு

சென்னை, ஜூலை 28: மெட்ராஸ் வர்த்தக மற்றும் தொழில் சபை (எம்சிசிஐ) புதிய தலைவராக ஏ.விஸ்வநாதன் தேர்வானார்.

சென்னையில் உள்ள நட்சத்திர உணவகம் ஒன்றில் மெட்ராஸ் வர்த்தக மற்றும் தொழில் சபையின் 190-ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் போது, டெல்பி டிவிஎஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் ஏ. விஸ்வநாதன், எம்சிசிஐ-இன் புதிய தலைவராகவும், வீல்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் முரளி வைத்தியநாதன் எம்சிசிஐ-இன் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு எம்சிசிஐ-இன் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்தியன் பேங்க் Indian Bank

தலைமை அலுவலகம்: தங்கக் கடன் வணிகப் பிரிவு தொலைபேசி: 044 - 2813 2372 / 2371 / 4391

e-டெண்டர் அறிவிப்பு

தங்கக் கடன் நகைப் பைகள் கொள்முதல் செய்வதற்காக, Indian Bank சார்பில் GeM Portal மூலம் e-டெண்டர் கோரப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு, எங்கள் வங்கியின் இணையதளமான https://indianbank.bank.in/en/tender மற்றும் GeM Portal https://gem.gov.in (GeM Bid No: GEM/2026/B/7839828) ஆகியவற்றைப் பார்வையிடவும்.

துணைப் பொது மேலாளர் (GCB Vertical)

கடன் வசூல் தீர்ப்பாயம்-II, சென்னை வழக்குமன்றத்தில்

(6 வது தளம், கூடுதல் அலுவலகக் கட்டடம், சாஸ்திரிபவன், ஹாடோஸ் சாலை, சென்னை-600 006)

O.A.எண்.38/2026

M/s. டச்சு பேங்க் Ag, தற்சமயம் செயல்படும் இடம்: 4-4a, வெஸ்டர்ன் டவர், சன்னி சைடு, அப்பல்லோ மருத்துவமனை அருகில், தரைத்தளம், ஷஃபி முகமது சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006 ...மனுதாரர்

-எதிரிடை-

1. M/s. GVS நேச்சுரல் புராடக்ட்ஸ் பிரதிநிதியாக அதன் உரிமையாளர் கிரி கனகு (PAN எண். APQPK6031C) தரைத் தளம், எண். 23 A, திருவள்ளுவர் நகர் பிரதான சாலை, ஆலந்தூர், சென்னை 600016. இன்னொரு முகவரி 23, 9வது தெரு, BV நகர், நங்கநல்லூர், சென்னை. - 600114.

2. திரு. கிரி கனகு (PAN எண். APQPK6031C) நியூடெக் வைவ், ஃபிளாட் D, எண்.57/77, 53வது தெரு, அசோக் நகர், பூங்கா அருகில் சென்னை - 600083 ...எதிர்மனுதாரர்கள்

கடன் ஒப்பந்தப்படி, வணிக தவணை கடன் கணக்கு எண். 250041474110019 க்கான 17.09.2025. அன்றுள்ளபடியான ரூ.20,36,924.99 பை (ரூபாய் இருபது லட்சத்து முப்பத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து நான்கு மற்றும் தொண்ணூற்று ஒன்பது பைசா மட்டும்) நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக மாண்பமை கடன் வசூல் தீர்ப்பாயம் II, சென்னை முன்னிலையில் மனுதாரர் வங்கியானது முதலேற்பு மனு எண் 38/2026 தாக்கல் செய்திருந்தது. மேற்சொன்ன வழக்கானது, மாண்பமை பதிவாளர் கடன் மீட்புத் தீர்ப்பாயம்-II, சென்னை முன்னிலையில் 23.07.2026 அன்று விசாரணைக்கு வந்தது. மனு மீது விசாரணை நடத்திய மாண்பமை பதிவாளர் கடன் மீட்புத் தீர்ப்பாயம்-II, சென்னை, மேற்படி வழக்கில் உங்கள் இருவருக்கும் எதிராக பத்திரிகையில் அறிவிப்பு வழங்க மனுதாரர் வங்கிக்கு உத்தரவிட்டார்.

மேற்சொன்ன 38/2026 எண் கொண்ட முதலேற்பு மனுவானது, 21.09.2026 அன்று விசாரணைக்கு பட்டியிலிடப்பட்டுள்ளது என்பதை தயவுகூர்ந்து கவனத்தில் கொள்ளவும். எனவே, விசாரணை நாளின்போது அஃதாவது 21.09.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நீங்கள் இருவரும் நேரில் அல்லது உங்களது வழக்கறிஞர் மூலமாக ஆஜராக வேண்டியது. ஆஜராகத் தவறினால், நீங்கள் இல்லாத நிலையிலும் மேற்சொன்ன வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

நாள்: 27.07.2026
இடம்: சென்னை

M/s. சாய் கிருஷ்ணன் அசோசியேட்ஸ்
மனுதாரர் வங்கியின் வழக்கறிஞர்கள்

பொது அறிவிப்பு

பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், நாங்கள் புல எண்கள் 66/2A, 66/107, 67/3B, 67/4A1, 67/4A2, 67/30, 67/31, 68/31, 68/32, 68/33, 69/1, 69/2, 72/7A, 72/7B, 72/8A1, 72/8A2, 72/9, 72/14A1, 72/14A2, 72/15A1, 72/15A2 & 113/1, யில் செம்பரம்பாக்கம் கிராமம் (முன்னர் செம்பரம்பாக்கம், நெடுஞ்சேரி மற்றும் பிரயாம்பட்டு கிராமங்கள்), திருமழிசை பேரூராட்சி, பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் எல்லைக்குள் உள்ள எங்களது அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமானத்திற்கு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு மூலம் (SEIAA, TN) (கடிதம் எண். EC அடையாள எண்: EC25B3812TN5640115N மற்றும் கோப்பு எண்: 12239, தேதி: 03.07.2025) சுற்றுச்சூழல் அனுமதியை நாங்கள் பெற்றுள்ளோம் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அறிவிப்பின் நகல் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் (TNPCB) உள்ளது. மேலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இணையதளத்திலும் அதைப் பார்வையிடலாம்.

https://parivesh.nic.in/

M/s. Chennai Residential Developers Private Limited
Plot No. A, No.36/1, Gandhi Mandapam Road,
Kotturpuram, Chennai.

Date : 29.07.2026
Place: Chennai

பஞ்சாப் நேஷனல் வங்கி punjab national bank ...the name you can BANK upon !

வட்டார அலுவலகம், சென்னை, PNB டவர்ஸ், II தளம்,
எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-14. போன் : 2812 0225 / 0232,
Mob: 94812 55109, 89294 26575 Email : cochngad@pnb.bank.in

அலுவலக இடம் தேவை

பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு கீழ்க்கண்ட இடங்களில் கிளை அலுவலகத்திற்கு ஹால் வகைகளுடன் தரை தளத்தில் மற்றும் முதல் தளமாக இருந்தால் மின் தூக்கி (லிப்ட்) வசதியுடன் ATM இடம் உள்ளிட்ட கார்பெட் பகுதியுடன் 15 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு குத்தகை / வாடகை அடிப்படையில் இடம் தேவை.

இடம்	மாவட்டம்	கட்டிட உட்பரப்பளவு (சதுர அடி)
மணலி	சென்னை	1680 to 2100
ஒரகடம் (இன்டஸ்ட்ரியல் காரிடர்)	காஞ்சிபுரம்	1280 to 1700
சுங்குவார்சத்திரம்	காஞ்சிபுரம்	1280 to 1700

மேற்குறிப்பிட்டுள்ள இடத்திற்கான சட்டப்பூர்வ அதிகாரிகளிடமிருந்து அனைத்து அனுமதிச் சான்றிதழ்களும் இருக்க வேண்டும். விருப்பமுள்ள உரிமையாளர்கள் / பதிவுசெய்யப்பட்ட பவர் ஆப் அட்டர்னி வைத்திருப்பவர்கள், தங்களுடைய நீண்ட கால குத்தகை அடிப்படையில் 15 ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு குத்தகைக்கு விடத் தயாராக இருப்பவர்கள், பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தங்கள் விலைப்புள்ளிகளை pnb.bank.in என்ற இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து அல்லது பரிந்துரைக்கப்பட்ட படிவத்தை மேற்குறிப்பிட்ட முகவரியில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விலைப்புள்ளிகளை முறையாக சீல் வைக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டு, மேலே உள்ள முகவரியில் 11.08.2026 அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிட்டவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

வங்கியால் எந்த தரகும் தரப்படாது. எந்தவொரு காரணத்தையும் கூறாமல், அதன் சொந்த விருப்பத்தின் பேரில் ஏதேனும் அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்க அல்லது நிராகரிக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

-ஒப்பம்-
29.07.2026 வட்டார தலைமை அதிகாரி

தமிழ்நாடு அரசு

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

விண்ணப்பங்களுக்கான அழைப்பு

கட்டடம் மற்றும் மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 2016-இன் கீழ் பின்வரும் பதவிகளுக்குத் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1.	தலைவர்	தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் (TNRERA)	ஒரு (01) பணியிடம்
2.	உறுப்பினர்	TNRERA	நான்கு (04) பணியிடங்கள்
3.	தொழில்நுட்பம் அல்லது நிர்வாக உறுப்பினர்	தமிழ்நாடு கட்டட மனை விற்பனை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (TNREAT)	ஒரு (01) பணியிடம்

மேற்கூறிய பணியிடங்களுக்கான தகுதிகள், அனுபவம், வயது, பதவிக்காலம் மற்றும் பிற பணி நிபந்தனைகள் ஆகியவை கட்டடம் மற்றும் மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 2016 மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) விதிகள், 2017-ன்படி இருத்தல் வேண்டும். அப்பணியிடங்களுக்கான சம்பளம் மற்றும் படிகள் மேற்கூறிய சட்டம் மற்றும் விதிகளின்படி வழங்கப்படும்.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்:

அரசு முதன்மைச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **19 ஆகஸ்டு 2026 மாலை 5.45 மணிக்குள்.** விண்ணப்பதாரர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

செ.ம.தொ.இ./659/வரைகலை/2026 **அரசு முதன்மைச் செயலாளர்.**

பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா Bank of Maharashtra

பதிவு அலுவலகம்: லோக்மங்கல், 1501, சிவாஜிநகர், புனே-411005 கிளை அலுவலகம்: [illegible] நாக்பூர்-440001.

தமிழ்நாடு மாநிலத்தில் (நடைபெற்று வரும்) HAM கலப்பின சாலைத் திட்ட கட்டுமானத்தில் ஒப்பந்ததாரரை 'ஸ்விஸ் சேலஞ்ச்' செயல்முறை மூலம் மாற்றீடு செய்ய விருப்பம் தெரிவிப்பதற்கான அழைப்பு

[illegible]

இனங்கள்	விவரங்கள்
ஏப்ரல் 30, 2026 அன்று நிலுவையில் உள்ள கடன் தொகை	ரூ.415.39 கோடி (ரூ.40.45 கோடி MADQ நீங்கலாக)
[illegible] EOI ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி	ஆகஸ்ட் 3, 2026, மாலை 5 மணிக்குள் (IST)
VDR-க்கு [illegible] கடைசித் தேதி	ஆகஸ்ட் 17, 2026
மின் - ஏல நாள்	ஆகஸ்ட் 18, 2026
தொடக்க ஏலத் தொகை (Anchor Bid Amount)	ரூ.152.00 கோடி (முழு ரொக்க அடிப்படையில்)
மார்ஜின் (தொடக்க ஏலத் தொகையில் 5%)	ரூ.7.60 கோடி
[illegible]	ரூ.159.60 கோடி (முழு ரொக்க அடிப்படையில்)
ஏல உயர்வுத் தொகை	குறைந்தபட்சம் ரூ. 2.00 கோடி மற்றும் அதன் மடங்குகள்

[illegible]

BOBCAPS BOB கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 1704, B விங், 17வது தளம், [illegible] மும்பை-400051.

தொடர்பு நபர்	நிறுவனம்	அலைபேசி எண்	மின்னஞ்சல் முகவரி
[illegible], AVP	(BOBCAPS)	+91 7666412395	project.[illegible]@bobcaps.in
[illegible]	(BOBCAPS)	+91 9867939303	
[illegible], CM	(BOM)	+91 7756926591	bmp2828@bankofmaharashtra.bank.in

[illegible]

தேதி: ஜூலை 29, 2026
இடம்: நாக்பூர்

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்
பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா-க்காக

ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் டிசிடி லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
இணையதளம் : www.sundaram-clayton.com தொலைபேசி : 044 - 28332115, மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com
CIN : L51100TN2017PLC118316

30 ஜூன் 2026 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.06.2026	30.06.2025	31.03.2026	30.06.2026	30.06.2025	31.03.2026
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	வியாபார நடவடிக்கைகளின் மூலம் வருமானம்	524.22	442.12	1,788.55	591.65	511.64	2,025.61
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	22.79	22.40	113.34	(53.09)	(52.07)	(185.46)
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	22.79	22.40	626.83	(53.09)	(52.07)	328.03
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	17.04	17.01	552.23	(59.33)	(57.76)	252.38
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம் / (நஷ்டம்)]	21.47	13.78	546.35	(56.83)	(58.42)	334.27
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	11.02	11.02	11.02	11.02	11.02	11.02
7	இருப்புகள் (மறு மதிப்பீடு இருப்புகள் நீங்கலாக)	-	-	1,949.49	-	-	1,284.38
8	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்) (அ) அடிப்படை	7.73	7.72	250.48	(26.91)	(26.20)	114.48
	(ஆ) டைல்யூட்டட்	7.73	7.72	250.48	(26.91)	(26.20)	114.48

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, ஜூலை 28, 2026 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிதிநிலை முடிவுகள் குறித்து நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மாற்றப்படாத கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.
2. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaram-clayton.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
3. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஜூன் 30, 2026 அன்றுடன் முடிவடைந்த காலாண்டுக்கான நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளை கீழே உள்ள QR குறியீட்டின் மூலம் அணுகலாம்:

தேதி : 28.07.2026

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்டிற்காக
ஒப்பம் / -
வேணு சீனிவாசன்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரர் வாங்க உத்தேசித்துள்ள அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட காலி நிலம் அமையப் பெற்ற சர்வே எண்கள் பின்வருமாறு -

வ.எண்	சர்வே எண்கள்	ஏக்கரில் பரப்பளவு
1.	760/3A	0.15.25
2.	760/2A	0.24.50
3.	760/1B1A	0.49
4.	762	1.19
5.	763/2B	0.86
6.	897/3A	0.71.30
7.	763/1B	0.67
8.	897/2B1	0.57
9.	898/2	0.47
10.	898/1	0.37
11.	898/3A (Part)	0.26
	மொத்தம்	5.99.05

அமைவிடம் - கன்னிகைப்பேர் கிராமம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். எல்லாம் சேர்த்து மொத்தப் பரப்பளவு 5 ஏக்கர் மற்றும் 99.05 சென்ட் அல்லது தோராயமாக அந்த அளவு. அதன் தற்போதைய உரிமையாளர்களிடம் இருந்து வாங்கப்படுகிறது. அஃதாவது

1. M/s ஹம்சா லாஜிஸ்டிக் சர்வீசஸ், ஒரு கூட்டாண்மை நிறுவனம், அதன் அலுவலக முகவரி- எண் 3G, க்ளென்டன் ப்ளேஸ், 813, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை- 600 010
2. M/s ஸ்ரீ சாய் கணேஷ் லாஜிஸ்டிக்ஸ், ஒரு கூட்டாண்மை நிறுவனம், அதன் பதிவு அலுவலக முகவரி - எண் 1, பரசு தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை-600010.

மேற்சொன்ன சொத்தின் முதல் உரிமையாளர்- திருமதி. M. பத்மினி க/பெ திரு. M. பாலாஜி சரவணன்

யாரேனும் நபருக்கோ / நிறுவனத்துக்கோ மேற்சொன்ன சொத்தின்மீது ஏதேனும் உரிமைகோரலோ பற்றுரிமையோ இருந்தால். இந்த அறிவிப்பு நாளில் இருந்து "ஏழு நாள்களுக்குள்" தமது உரிமைகோரல் அல்லது ஆட்சேபணை ஏதேனும் இருந்தால் அவற்றை அந்த கோரலுக்கான ஆவணச் சான்றுடன் கீழே கையொப்பம் இட்டுள்ளவரிடம் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால் மேற்படி சொத்து மீது எந்த வகையிலும் எவ்விதத்திலும் வேறு எந்த உரிமை கோரலோ பற்றுரிமையோ எந்த ஒரு வில்லங்கமோ இல்லை என தீர்மானிக்கப்படுவதுடன் எமது கட்சிக்காரர் மேற்படி சொத்தை வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட முடியும் மேலும் அதற்குபிறகு இதுசார்ந்த எந்த உரிமை கோரல் அல்லது ஆட்சேபணைகள் தெரிந்தே விட்டுக் கொடுக்கப்பட்டதாக கருதப்பட்டு தள்ளுபடி செய்யப்படும்.

V சேஷாத்திரி & கம்பெனி
வழக்கறிஞர்கள்
T-58B, புதிய எண் 29, 32ஆவது குறுக்குத்தெரு, பெசன்ட் நகர், சென்னை-600090
தொபே எண்கள்.24914001/24914002
மின்னஞ்சல்: advocateseshadri@gmail.com
28/07/2026